<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

**அசல் வழக்கு எண். 42/2020**

**பி.வா.சா. 1– கண்ணன்**

<u>30–07–2026 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 7 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. நஞ்சப்பன், சந்திரசேகர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் நஞ்சப்பன் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். சந்திரசேகரை தெரியாது. நஞ்சப்பன் காலங்காலமாக எங்கள் ஊரில் தான் குடியிருந்தாரா என்றால் இல்லை. முதலில் அம்மாபாளையத்தில் குடியிருந்தார். அதன் பிறகு எங்கள் ஊருக்கு வந்தார். நஞ்சப்பன் திருப்பூர் மாவட்டத்தில் குடியிருக்கிறார் என்றால் சரிதான்.

2. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் கோபி செட்டிபாளையத்தில் குடியிருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் தெரியாது. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் திருப்பூரில் தான் குடியிருந்தார்கள் என்றும் அவர்கள் எந்த காலத்திலும் வேறு மாவட்டத்தில் குடியிருக்கவில்லை என்றும், பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக அவர்கள் கோபி செட்டிபாளையத்தில் குடியிருப்பதாக அதில் கண்டுள்ளது என்றால் தெரியாது.

3. என்னாலோ மற்ற பிரதிவாதிகளாலோ 1 மற்றும் 2 பிரதிவாதிகள் கோபி செட்டிபாளையத்தில் குடியிருந்ததற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முயற்சி செய்கிறேன். தாவாச் சொத்தின் வடகோட்டில் பெரிய காம்பவுண்ட் சுவர் உள்ளதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த சுவற்றை எனது கூற்றுப்படி யார் கட்டினார்கள் என்றால் 1 முதல் 4 பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருந்ததால் அவர்கள் தான் கட்டியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். காம்பவுண்டின் சுவரின் நீள, அகலம் உயரம் தெரியாது. வழக்குச் சொத்தில் நானும் மற்ற பிரதிவாதிகளும் அனுபவத்தில் இல்லாததால் தான் காம்பவுண்ட் சுவரின் நீள, அகலம் உயரம் தோராயமாக தெரியவில்லை

என்றால் தோராயமாக120 அல்லது 150 அடி நீளம் இருக்கும்.

4. எஸ்.பி.மணி தாக்கல் செய்த வழக்கிலோ அல்லது வழக்கு சம்பந்தமாக ஏற்பட்ட ஆவணங்களிலோ வாதிகள் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்குள் ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட ஆவணங்களிலும் வாதிகள் நேரடியாக தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். பொது அதிகார ஆவணத்தை தவறுதலாக பயன்படுத்தி அதை எழுதிக் கொடுத்த வேலப்பன் இறந்த பிறகு நானும் மற்ற பிரதிவாதிகளும் திட்டமிட்டு வேறு மாவட்டத்தில் வா.சா.ஆ.4 கிரய ஆவணத்தை பதிவு செய்துள்ளோம் என்றும், அதனால் வா.சா.ஆ.4 ஆவணம் சட்டப்படி செல்லாது என்றும், வா.சா.ஆ.4ஐ தொடர்ந்து பதிவு செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களும் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

5. எஸ்.பி.மணி கிரயம் செய்து கொடுக்கச் சொல்லி தான் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் எவ்வளவு பணம் கொடுத்தார் என்று சொல்லி உள்ளார் என்றால் தெரியாது. அந்த வழக்கின் 6ம் பிரதிவாதி சோமசுந்தரம் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் ரூ.5 லட்சம் எஸ்.பி.மணியிடம் கடன் பெற்றதாக தான் சொல்லி உள்ளார் என்றால் தெரியாது. அந்த வழக்கின் பிரதிவாதிகள் ரூ.30 லட்சம் பணத்தை எஸ்.பி.மணியிடம் கொடுத்ததன் அடிப்படையில் தான் அந்த வழக்கு சமாதானமாகி உள்ளது என்றால் தெரியாது.

6. வாதிகள் கையெழுத்து போடவேண்டும் என்று அந்த வழக்கின் வாதி எஸ்.பி.மணி கேட்டதால் தான் அந்த கிரயம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. தென்னரசை முதன் முதலில் நான் எப்போது பார்த்தேன் என்றால் கிரயம் பெறும் போது பார்த்தேன். கிரய ஆவணத்தில் சௌந்தரராஜன் என்பவர் கையொப்பம் செய்தள்ளார் என்றால் பார்க்கவேண்டும். சௌந்தரராஜன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் ஆளை பார்த்தால் தான் தெரியும்.

தென்னரசுவின் மகன் தான் சௌந்தரராஜன் என்றால் தெரியாது. தென்னரசு, எனக்கு மற்றும் மற்ற பிரதிவாதிகளுக்கு பொது அதிகார ஆவணம் ஏற்பட்ட தேதியில் இருந்து அனைத்து விவரங்களுமெ தெரியும் என்றால் சரியல்ல.

7. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா,சா,ஆ.2ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள 10 செண்ட் இடம் பட்டாப்படி பாத்தியப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அதன் காலை எண் 114 என்றால் அப்படி தான் உள்ளது. அந்த காலைக்குரிய பட்டா என்னிடம் காண்பிக்கப்படுவது என்றால் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் பட்டா எண் 114 நத்தம் காலை என்று தான் உள்ளது ஆனால் அது தான் பட்டாவா என்று எனக்கு தெரியாது.

8. என்னிடம் காட்டப்படும் பட்டாவில் நஞ்சப்பன், சந்திரசேகர் பெயர் உள்ளதா என்றால் அவர்கள் இருவரின் பெயரும் என்னிடம் காட்டப்படும் பட்டாவில் இல்லை. அலுக்குழி கிராமத்தில் 1,2 பிரதிவாதிகளுக்கு சொத்தே இல்லை என்றும், பி.வா,.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள கோபி செட்டிபாளையம் முகவரியில் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் குடியிருக்கவில்லை என்றும், பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை ஏற்படுத்துவதற்காக மோசடியாக எழுதி உள்ளோம் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

9. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் 2ம் பக்கத்தில் வேலப்பனுக்கு சுயார்ஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்றும், அதன்பிறகு பாக சாசனப்படி பாத்தியப்பட்டது என்றும், பின்னும் அவருடைய வாரிசுகளுக்கு பிதுராஜித அதாவது தந்தையார் வழியில் பாத்தியப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தந்தையார் இறந்த பிறகு தான் வாரிசுகளுக்கு சொத்து வரும் என்றால் சரியல்ல. பாட்டன் சொத்தாக இருந்தால் உடனே வரும். வேலப்பன் எப்போது இறந்தார் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

10. வாதிகள் வேலப்பன் இறந்ததாக குறிப்பிட்டு சொல்லி உள்ள தேதியில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை என்றால் இறப்புச் சான்றிதழ் அவ்வாறு இருந்தால் சரிதான்.

13ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. எனக்கும் இந்த வழக்கிற்கும் என்ன சம்பந்தம் என்றால் தாவாச் சொத்தை நான் கிரயம் பெற்றுள்ளேன். இவ்வழக்கில் அரசு அதிகாரிகளை சேர்த்து உள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அரசு அதிகாரிகளை எதற்காக சேர்த்துள்ளார்கள் என்றால் தெரியாது. எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வாதிகள் சொத்தில் பங்கு உள்ளதாக தாக்கல் செய்துள்ளார்கள்.

2. தாவாச் சொத்துக்கும், 13ம் பிரதிவாதிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரிதான். நியாயமான முறையில் தான் தாவாச் சொத்தை கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். அசல் வழக்கில் தக்க பரிகாரம் கோரவில்லை என்பதால் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரிதான். வழக்கு தொடர்பான சரியான ஆவணங்களை வாதிகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கில் வழக்குமூலம் இல்லாததாலும், 13ம் பிரதிவாதியை தேவையற்று தரப்பினராக சேர்த்துள்ளதாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2026.07.30 06:28:04 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.